දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය - පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය
தொடர் தொலைக் கல்வி நிலையம் - பேராதனைப் பல்கலைக்கழகம்
CENTRE FOR DISTANCE & CONTINUING EDUCATION – UNIVERSITY OF PERADENIYA

இளங்கலைமாணி முதலாம் ஆண்டுப் பரீட்சை (வெளிவாரி புதியபாடத்திட்டம்) (ஏப்ரல் 2017)

# ECNE 102 ஓப்பீட்டுப் பொருளாதார அபிவிருத்தி

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் குறைந்தபட்சம் இரு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்க மட்டும் விடை தருக
இவ்வினாத்தாளில் உள்ள வினாக்களின் மொத்த எண்ணிக்கை 10 ஆகும்.
ஒவ்வொரு வினாவிற்கும் அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு புள்ளிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன
( மூன்று மணித்தியாலங்கள் )

## பகுதி I - ஐக்கிய இராட்சியம்

1. (i) பெரிய பிரித்தானியாவில் காணப்பட்டிருந்த மானிய முறையின் பிரதான பொருளாதார அம்சங்களை விபரிக்குக. (10 புள்ளிகள்)
   (ii) அதனுடைய வீழ்ச்சிக்குப் பங்களிப்புச் செய்யாத காரணிகளை பகுப்பாய்வு செய்க (10 புள்ளிகள்)

2. பதினெட்டாம் நூற்றாண்டிலும், பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் பிரித்தானியாவில், விவசாய முறைகள் எவ்வழிகளில் மாற்றமடைந்தன? விவசாயத்துறையின்மீது அம்மாற்றத்தின் தாக்க விளைவுகள் யாவை? (20 புள்ளிகள்)

3. (i) பதினெட்டாம் நூற்றாண்டில், பிரித்தானியாவின் பருத்தி நெசவுக் கைத்தொழிலில் ஏற்பட்ட தொழில்நுட்ப முன்னேற்றத்தினைச் சுருக்கமாக விபரிக்குக. (10 புள்ளிகள்)
   (ii) பெரிய பிரித்தானியாவின் கைத்தொழில் புரட்சியின் இரண்டாவது கட்டத்தினை, அதன் முதலாவது கட்டத்திலிருந்து நீர் எவ்வாறு வேறுபடுத்துவீர்? (10 புள்ளிகள்)

4. 1830 களிலிருந்து பெரிய பிரித்தானியாவின், புகையிரத வலைப்பின்னல் அமைப்பில் ஏற்பட்டு வந்த படிமுறை வளர்ச்சியினை விளக்கி, அது ஏற்படுத்திய சமூக, பொருளாதார தாக்க விளைவுகளை ஆராய்க. (20 புள்ளிகள்)

5. பெரிய பிரித்தானியா தொடர்பாகப் பின்வருவனவற்றுள் எவையேனும் **நாங்கினைப்** பற்றிச் சிறு குறிப்புக்கள் எழுதுக
   (i) நில அடைப்பு இயக்கங்கள்
   (ii) 1815 இன் தானியச் சட்டம்
   (iii) 1825-1870 காலப்பகுதியில் தொழிற்சங்க இயக்கங்கள்
   (iv) ஆவணர் இயக்கம்
   (v) தொழிற்சாலைச் சட்டங்கள் (04 x 05=20 புள்ளிகள் )

## பகுதி II - இலங்கை

6. இலங்கையில் கோல்புறுக் - கமரன் சீர்திருத்தங்களின் தன்மை, அவற்றின் விளைவுகள், அவற்றின் முக்கியத்துவம் ஆகியவற்றினை நுணுக்கமாகப் பரீசீலணை செய்க. (20 புள்ளிகள்)

7. பத்தொன்பதாம் நூற்றான்டில் இலங்கையில், கோப்பிக் கைத்தொழிலின் துரித வளர்ச்சிக்கும் அதன் சடுதியான வீழ்ச்சிக்கும் பொறுப்பாக இருந்துள்ள காரணிகளை அடையாளம் செய்து, அவற்றினை விளக்குக. (20 புள்ளிகள்)

8. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும், இலங்கையின் பொருளாதாரத்தின் இரட்டைத்துவ தன்மைகள் காணப்பட்டிருந்தமைக்கான காரணங்களைப் பகுப்பாய்வு செய்க. (20 புள்ளிகள்)

9. பத்தொன்பதாம் நூற்றாண்டில், இலங்கையின் பெருந்தோட்டத்துறையில் கிடைக்கப் பெற்ற கூலித் தொழில் வாய்ப்புக்களை கண்டிப் பிரதேச விவசாயிகள் நிராகரித்தமைக்கான காரணங்களைப் பரிசீலனை செய்க. (20 புள்ளிகள்)

10. இலங்கை தொடர்பாகப் பின்வருவனவற்றுள் எவையேனும் **நாங்கினைப்** பற்றிச் சிறு குறிப்புக்கள் எழுதுக .
    - (i) ராஜகாரிய முறையின் ஒழிப்பு
    - (ii) முடிக்குரிய காணிச் சட்டம்
    - (iii) 1802-1833 காலப்பகுதியில் கறுவா வர்த்தகம்
    - (iv) 1884-1896 காலப்பகுதியில் தேயிலைக் கைத்தொழில்
    - (v) நாணய சபை முறை

(04 x 05=20 புள்ளிகள் )

---